# ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

## பொது முன்னுரை

இன்று குருத்து ஞாயிறைக் கொண்டாடுகிறோம். புனித வாரத்தின் தொடக்கமாகவும், நுழைவு வாயிலாகவும் குருத்து ஞாயிறு அமைகின்றது. தாவீதின் மகனுக்கு ஓசான்னா முழக்கங்களோடும், ஒலிவ கிளைகளை கைகளிலே ஏந்திய வண்ணமாய் எபிரேயர் எருசலேமிற்குள் வீரப்பயணம் மேற்கொள்கிறார்கள். இந்தப் பயணம், தான் இயேசு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதாகவும், மீட்பின் முதல் படியாகவும் அமைகிறது.

ஈராயிரம் ஆண்டுகளாய் விடுதலைக்காய், வாழ்வின் விடியலுக்காய் ஏழை எளிய மக்களுக்கு நம்பிக்கையும், புத்துயிரையும் கொடுப்பதாகவும் அமைகிறது. அத்தகைய நாளை நினைவுகூரும் இன்று நாமும் குருத்தோலைகளை உயர்த்தி கொண்டு பவனியில் பங்கெடுக்க இருக்கிறன்றோம்.

பட்டங்களையும், பதவிகளையும் எதிர்பார்த்து இயேசுவின் பின் சென்றால் அவரின் பயணத்தில் நிச்சயம் நமக்கு இடமிருக்காது. இயேசுவைப்போல நாமும் தன்னலப் போர்வையை தகர்த்தும், ஆணவத்தை அழித்தும் இயேசுவின் பின் பயணிப்போம். அப்போது இப்புனித வாரம் நம்மை புனிதர்களாக நிச்சயம் மாற்றும் என்ற மனநிலையோடு இத்திருவழிபாட்டில் பங்கெடுப்போம். இத்திருப்பவனியின் வழியாக இயேசுவோடு கல்வாரிக்குப் பயணமாவோம்.

## குருத்தோலை பவனி முன்னுரை - I

இப்போது நாம் குருத்தோலை பவனியைத் தொடங்குகிறோம். பவனி என்றால் மக்கள் குதூகலமாக கூடி சாலைகளிலே திரண்டு செல்ல, அரசனோ அல்லது அதிகாரியோ அல்லது விழா நாயகனோ பவனியின் இறுதியிலே ஆரவாரமாக அழைத்து வரப்படுவர். ஆனால் நாம் இப்போது பங்கெடுக்கப்போகின்ற பவனியானது இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. தாவீதின் மகன் என்று போற்றப்பட்ட இயேசு, பவனியின் முன்னால் வழிநடக்க உலகம் அனைத்தையுமே தனக்குப் பின்னால் இழுத்துக்கொண்டும் இயக்கிக்கொண்டும் எருசலேம் நோக்கி முனைந்து விரைகிறார். எனவே குருவானவர் நம் எல்லோரையும் அழைத்தவராக, பாஸ்கா கொண்டாட இழுத்துச் செல்பவராக பவனியின் முன்னால் செல்ல, நாம் அனைவரும் அவரைப் பின் தொடர்ந்து, பாடல்களைப் பாடிக்கொண்டும், இயேசுவைப் புகழ்ந்துகொண்டும், அவரது எருசலேம் நுழைவில் பங்கு பெறவும், அங்கு அவரது இறப்பு, உயிர்ப்பு என்ற பாஸ்கா கொண்டாடவும் புறப்பட்டு செல்வோம்.

## குருத்தோலை பவனி முன்னுரை - II

ஆடம்பரத்தோடு உலா வரும் அரசர்கள் மத்தியில் கழுதையை தனது கல்வாரிப் பயணத்தின் சிம்மாசனமாக்கி, எளிமையை தன் வாழ்வின் உயர்ந்த இலட்சியமாய் கொண்டு, ஓசான்னா கீதம் முழங்க ஒலிவக்கிளையை கையில் ஏந்தியவர்களாக மக்கள் தொடர உலகை மீட்க வந்த இயேசு, எருசலேம் நகரம் நோக்கி உன்னத பயணம் மேற்கொள்கின்றார். ஆம், இன்று புனித வாரத்தின் முதல் நாள் குருத்து ஞாயிறு. தாவீது குலத்தில் முன்னறிவிக்கப்பட்டு பிறந்த இயேசு, மனித குலம் மீட்புபெற, துன்பத்தை தனது தந்தையின் விருப்பத்தின்படி ஏற்று வெற்றி வீரராய் எருசலேம் நகருக்குள் நுழைகிறார். இது வரலாற்று நிகழ்வு மட்டுமல்ல நாம் வாழ்வு பெற இயேசு வாழ்வை இழக்க தயாராகும் இலட்சியப்பயணம்.

எனவே அன்பு சகோதரமே! குருத்தோலைகளை கையில் ஏந்தியவர்களாய் இப்பவனியில் பங்கு பெறும் நாம் கவலைகளை கண்டு கண்ணீர் வடிக்காமல், தோல்விகளை கண்டு துவண்டுவிடாமல் சோகமான சுமைகளை பிறர் நலன் கருதி ஏற்ற இயேசுவின் மனநிலை இந்தப் புனித வாரம் முழுவதும் நம்மில் இருக்க வரம் வேண்டியவர்களாக இப்பவனியில் பங்கேற்போம். இறைவனின் அருளை நிறைவாய்ப் பெற்றுக் கொள்வோம்.

## திருப்பலி முன்னுரை

அன்பார்ந்தவர்களே, தவக்காலத்தின் இறுதிக்கட்டமாக, குருத்து ஞாயிறு வழிபாட்டிற்கு வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

நம் வாழ்வின் பயணம் தொடர்கதையல்ல. அதற்கு ஒரு கட்டத்தில் முற்றுப்புள்ளி உண்டு. பறந்து வரும் ஈசலுக்கு ஒருநாள்தான் வாழ்க்கை. அது சிறகு விரித்து, வாழ்வை ரசித்து வாழ்ந்துதான், மடிகின்றது. நம் இறைமகனின் வாழ்க்கை 33 ஆண்டுகள் என்றபோதிலும், தன் வாழ்வில் இலட்சியப் பயணத்தை ரசித்து வாழ்ந்தார். இயேசுவின் வாழ்வின் மூன்று பயணங்கள்: இயேசு பிறப்பின்போது, ஏரோதின் அதிகாரத்திற்கு பணிந்து, எகிப்துக்கு தப்பியோடி, இறுதியாக நாசரேத்தூரில் குடியமர்ந்தது வரை இறைமகன் மேற்கொண்டது “வாழ்க்கைப் பயணம்”. அதன்பின் தன் பெற்றோருக்குப் பணிந்த வாழ்ந்து, தன் முப்பதாவது வயதில், பாலைவனத்தில்; மேற்கொண்ட பயணம், “பணிக்கான பயணம்”. மூன்றாவதாக, எருசலேமில் பலரின் வாழ்வுக்காக தம்;மைக் கையளிக்க முற்படும் இந்தப் பயணம்,” மரணப் பயணம்”, “பலிக்கான பயணம்”.

இந்தப் பயணம் அவரின் இலட்சியம். அவரின் இலட்சிய தாகம் அவரை வாழ்வின் அனைத்து போராட்டங்களையும், சோதனைகளையும், எதிர்ப்புக்களையும், விமர்சனங்களையும் துணிவுடன், உறுதியுடன் எதிர்கொள்ள வைத்தது. தன் இலட்சியத்திற்காக அனைத்தையும் தியாகம் செய்தார். அந்தத் தியாகம், இலட்சியத்திலே வெற்றியை அடையச் செய்தது.

இயேசுவின் இந்தப் பயணத்தில் பங்கு பெறும் நாம் எந்த இலட்சியத்தை நம் மனக்கண் முன் வைத்துள்ளோம்? வெறும் உலக மாயையான பணம், பதவி, புகழ் இவற்றை மையமாக வைத்துத்தான் நம் இலட்சியங்கள் அமைகின்றன. அதையும் கடந்தவர்களாக, கிறிஸ்தவர்கள் என்ற பெயர் தாங்கியுள்ள நாமும், இயேசுவைப் போல, அன்புக்காக, நீதிக்காக, ஒடுக்கப்பட்டவர்களின் உரிமை வாழ்வுக்காக, பிறரன்புப் பணிக்காக நம்மையே நாம் அர்ப்பணிக்கக்கூடிய ஒரு உயரிய இலட்சிய வேட்கையை உள்ளத்தில் வளாக்க வேண்டும்.

“இந்த உலகில் நாம் நற்செயல்கள் புரிவதெற்கென்றே படைக்கப்பட்டுள்ளோம்” என புனித பவுல் கூறுகின்றார். அதை, நம் இதயத்தின் குரலொலியாக, உள்ளத்தில் உள்வாங்கி, இறைவன் தந்த சாயலுக்கும், உயிர்மூச்சிற்கும் சிறந்த பரிசாக, இயேசுவின் இலட்சியப் பணியிலே நாமும் நம்மையே அர்ப்பணித்து, நம்மையே கரைத்து, அவரன்பை நம்மிலே பிறர் காணச் செய்பவர்களாக, மனிதத்தை மண்ணிலே மலரச் செய்வர்களாக, அமைதியின் தூதுவர்களாக வாழ்ந்திட, அருள் வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் நம்மையே முழுமையாக அர்ப்பணிப்போம்.

## முதல் வாசக முன்னுரை (எசாயா 50: 4-7)

அநீதிகளும், அராஜகங்களும், சுயநலமும் நிறைந்த உலகத்தினை எதிர்த்து போராடுகிறபோது, பல துன்பங்களும் அவமானங்களும், ஏற்படும். பலர் இகழ்வார்கள், ஆனால் தாழ்ச்சியோடும், துணிவோடும் அவைகளை எதிர்த்துப் போராட ஆண்டவர் இயேசு நமக்கு துணையாயிருக்கிறார். அவரை நாடுங்கள் அவர் நம்மை எல்லாச் சூழ்நிலையிலும் வழிநடத்துவார் என்று எசாயாவின் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

(OR)

துன்புறும் ஊழியனாக இயேசுவைக் குறித்து எசாயா இறைவாக்கினர் முன்னறிவித்ததை இன்றைய முதல் வாசகம் நமக்குத் தருகிறது. நம்முடைய துன்ப நேரத்தில் வலிமைமிக்க போர் வீரனைப்போல் நம் கடவுள் கூடவே இருந்து நம்மை இழிநிலைகளிலிருந்து விடுவிப்பார் என்ற எண்ணத்தை உள்ளத்தின் ஆழத்தில் பதித்தவர்களாய் வாசகத்திற்கு நமது உள்ளத்தை திறந்து வைப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (பிலி 2: 6-11)

இயேசு இறைமகன் எல்லாவற்றின் மேலும் அதிகாரமும், வல்லமையும் இருந்தாலும் அன்பு கருதி, அமைதி கருதி, சமாதானம் கருதி தன்னையே வெறுமையாக்கினார். தாழ்த்திக்கொண்டார். தாழ்ச்சி என்பது வீழ்ச்சி அல்ல. ஆனால் அவரை அனைத்திற்கும் மேலாக உயர்த்தினார். நாமும் நமக்கு அறிவுத்திறமை, ஆள் திறமை, பணம் பதவி இருந்தாலும் பணிவோடு பிறர் வாழ்வு முன்னேற முயற்சி செய்யும்போது கடவுள் நம்மை மேன்மைப்படுத்துவார், என்று கூறும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

(OR)

இறைமகன் இயேசு தன் தந்தையின் மீது கொண்ட அன்பினாலும், கீழ்ப்படிதலினாலும் மானுடல் ஏற்கும் அளவுக்கு தம்மையே வெறுமையாக்கி தாழ்த்தி கொண்டதால் இறைவன் அவரை எல்லோருக்கும் மேலாக உயர்த்தினார் என்பதை கூறும் இவ்வாசகத்தை கேட்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. “நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் புரிவோம்” என்ற இறைவார்த்தைக்கேற்ப,

உம் வார்த்தையை உலகெங்கும் அறிவிக்கும் பணியில், தங்களையே அர்ப்பணித்துள்ள நற்செய்திப் பணியாளர்களை ஆசீர்வதியும். அவர்களின் பணிகளிலே, பயணங்களில் எவ்வித இடர்பாடும் நேரிடாதவாறு அவர்களைக் காத்தருளும். அவர்கள் வல்லமையோடு உம் வார்த்தையை அறிவித்திட, தூய ஆவியின் கனிகளை நிறைவாகப் பொழிந்து, அவர்கள் அறிவிக்கும் இறைவார்த்தைகள், கேட்பவர்களிடம்; நல்ல மனமாற்றத்தினைப் பெற்று, உண்மைக் கடவுளாகிய உம்மை உணர்ந்து, உமக்குகந்தவர்களாக வாழ்ந்திடவும், வரம் வேண்டி, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. “நேர்மையற்ற சினத்தை நியாயப்படுத்த முடியாது” என்ற இறைவார்த்தைக்கேற்ப,

எங்கள் வாழ்வில் பலரிடம், பல்வேறு காரணங்களுக்காக, பல நேரங்களில் எங்கள் கோபத்தை வெளிப்படுத்துகின்றோம். பல தருணங்களில் நியாயமே இல்லாத, அவசியமே இல்லாத காரணங்களுக்காக கோபத்தைக் காட்டுகின்றோம். அந்தக் கோபத்தினால் நிம்மதி, மகிழ்ச்சி, அமைதி மற்றும் உறவுகளை இழந்து தவிக்கின்றோம். நேர்மையான, நியாயமான காரணங்களுக்காக அன்றி, அறிவீனமற்ற கோபத்தைக் வெளிப்படுத்தாது, கட்டுபாட்டுடன், பொறுமையுடன் வாழ்ந்திட, அருள் வேண்டி, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

3. “திட்டமிடல் எல்லாச் செயல்களுக்கும் முன்செல்கின்றது” என்ற இறைவார்த்தைக்கேற்ப,

குடும்பம், சமூகம், நாடு என அனைத்து நிலையினரும் தங்கள் வாழ்வை திட்டமிடுதலுடன் கொண்டு செல்கின்றனர். அந்தத் திட்டமிடல், பல நேரங்களில் செயலாக்கம் பெறாமல், வார்த்தை மற்றும் எழுத்து வடிவிலே மடிந்து விடுகின்றது அல்லது திட்டங்கள் சரியாக அமையாமல், அவற்றைச் செயல்படுத்தும்போது தோல்வியைக் கொடுத்து விடுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் நீர்தாமே, நாங்கள் நிறைந்த ஞானத்துடனும், அறிவுடனும் நன்கு திட்டமிட்டு செயல்படுத்திடவும், அவை தோல்வியைத்

தழுவும் நேரங்களில் மனம் சோர்ந்திடாமல், அவற்றை ஏற்று, தொடர்ந்து உற்சாகத்துடன், ஊக்கத்துடன் வாழ்வில் பயணித்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. "கடும் உழைப்பிற்கே மனிதர்கள் படைக்கப்பட்டிருக்கின்றனர்" என்ற இறைவார்த்தைக்கேற்ப,

நாங்கள் ஒவ்வொருவரும் உழைத்து வாழும் மாந்தர்களாக வாழ்ந்திட உமதருளைத் தாரும். பலர் உழைக்க மனமில்லாமல் சோம்பேறிகளாக வாழ்ந்து, பிறரின் வாழ்வில் தலையிட்டு, தேவையற்ற பிரச்சனைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இன்னும் பலர், உழைக்க மனமிருந்தும், தகுந்த வேலைவாய்ப்புக்களின்றி, வேதனையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். நீர்தாமே, அவர்கள் உழைத்து, தங்கள் வாழ்வில் வளமையை, நிறைவைக் கண்டிட, வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. "தந்தையரைக் கைவிடுவோர் கடவுளைப் பழிப்பவர் போல்வர்" என்ற இறைவார்த்தைக்கேற்ப,

இன்று சமூகத்தில் மாந்தர்களிடையே, பெற்றோரை சரியாக மதிக்காமல், அதிலும் அவர்கள் வயதான காலங்களில் அவர்கள் முற்றிலுமாக புறக்கணிக்கப்டுகின்ற அவலநிலையே உறவுகளில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. "வயது முதிர்ந்த நிலையில் இரண்டாவது குழந்தைகளாக மாறுகின்றனர்" என்பதை ஏற்க இயலாதவர்களாய், அவர்களை கவனிக்க மனமற்றவர்களாய், தங்கள் இல்லத்திலே தனித்தீவாக்கிடும் நிலையே மேலோங்கி காணப்படுகின்றது. இத்தகைய, கல்லான பிள்ளைகளின் இதயங்களை, மாற்றி, பெற்றோரை நேசித்து, மதித்து, துணையாக இருந்திட, கனிவுள்ள இதயத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com